KUBERA TEXTILES
NEW COLONY, CHROMEPET
HDFC BANK (GROUND FLOOR)
98404 93934 / 96001 34184
SAREES, NIGHTIES
LINING MATERIAL AVAILABLE
CHUDIDHARS & BLOUSE BITS

GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **CHROMPET** Weekly News Paper www.gstroadnews.com
Chromepet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar
Vol:13 Issue - 39 11 Jan 2026 - 17 Jan 2026 4 Pages - Free Circulation Ct: 99628 80902

FLAT FOR RESALE @IRUMBULIYUR
0.5 KM FROM GST ROAD

3BHK-1516 Sqft, UDS: 711 Sqft
TOTAL 5 FLATS CONTAINED, COVERED CAR PARKING
2 BALCONIES -1 FACING- 50 FEET BROAD ROAD
94442 87170 / 94449 61995

தாம்பரம்–பெங்களூர்” அரசின் சொகுசு பஸ்

தாம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து பெங்களூர்” வரை செல்லும் BS 6 ரக பேருந்து. இந்த பேருந்தின் தடம் எண் 444 ஆக இயங்குகிறது. இந்த பேருந்து தாம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து ஓரகடம், வாலாஜாபாத், காஞ்சிபுரம், வேலூர், ஆம்பூர், கிருஷ்ணகிரி, ஓசூர். வழியாக பெங்களூர்” வரை செல்கிறது. இந்த பேருந்து காஞ்சிபுரம் பணிமனையில் இருந்து இயங்குகிறது. இந்த பேருந்து தாம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் நேரம்: 6:50, 7:30, 8:15, 9:30, 10:30, 13:45,19:15,19;15. மறுமார்கமாக பெங்களூர் பேருந்து நிலையத்திலிருந்து நேரம்: 6:00, 12:30, 20:15, 20:55, 23:00

TEACHERS NEEDED FOR THE FOLLOWING SUBJECTS
1. Biology M.Sc B.Ed
2. English M.A, B.Ed
3. Maths M.Sc, B.Ed
4. Accountancy M.Com, B.Ed

98408 79246

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
LUXURY FLATS FOR SALE

@CHROMPET
RADHA NAGAR
"SRI KRISHNA NIVAS"
4 BHK
2082 Sqft

PROJECT FEATURES
☑ Power Backup for all Flats and Common Area ☑ Video Door Access Control
☑ False Ceiling with LED Lights & Fan, Cot, AC ☑ CCTV Automatic LIFT
☑ Wooden Wardrobes ☑ EV Charging Point ☑ Fully Furnished
☑ Modular Kitchen ☑ CCP ☑ Jaquar Fittings
Land Owners Interested in Joint Venture or outright Please Contact us
No:16, D No: 32,Jesupatham Street,Radha Nagar,Chrompet,Chennai-600 044
Cauvery Foundations 98405 76000

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
FLATS FOR SALE
@ CHROMEPET
Paul Victor Street, Near MIT Bridge
100 Mtrs From GST Road
Deluxe Flats
2 & 3 BHK - 954, 1023 & 1103 sqft
@ KUMBAKONAM
Solaiappan Street, 100 Mtrs from River Kaveri
700 Mtrs From Kumbeswarar Temple
1 & 2 BHK - 410, 671 & 644 Sqft
Balaji Homes
98408 40017 / 88382 74383

3 BHK INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ CHROMPET
Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School

3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged
MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
PREMIUM LUXURY FLAT FOR SALE
@EAST TAMBARAM
NR TO SANATORIUM VELAMMAL NEXUS CAMPUS

ON 30 FEET MAIN ROAD
ONLY 300 MTRS FROM
SANATORIUM RAILWAY STATION
ONLY 2 FLATS AVAILABLE
3BHK -1313 SQFT
NORTH FACING
AMENITIES
LIFT ,CCP, CCTV, INVERTOR POWER BACKUP, EV CHARGING POINT,IND VIDEO DOOR PHONE, RAIN WATER HARVESTING
AKR HOMES & DEVELOPERS
Crafting Homes, Building Communities
No: 28/23, Mahalakshmi street, East Tambaram, Chennai- 600059
98842 66667

More than Travel, it's Joy In Life!
- Flight Bookings.
- International & Domestic Groups.
- Customised Holiday Packages.
- Honeymoon Packages.
- Passport Services.
- Visa Services & Assistance.
- Cruise Bookings.
- Forex.
- Train Bookings.
- Temple Visits.
- Adventures Trip.
- Car & Bus Rentals.
- Event Management.
- College Group Tours.
- Auto Bookings.

joy in life TOURS and TRAVELS

97455 34567
info@joyinlife.in
No : 32/18, Nellipetai Street, Zamin Royapet, Chrompet, Chennai - 600044

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
24 HRS POWER BACKUP*

4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

BALAJI NAGAR
Nr. PURUSHOTHAMAN NGR PERUMAL TEMPLE
24 HRS POWER BACKUP*

4 BHK - 1710 Sqft
2 BHK - 867 & 843 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
24 HRS POWER BACKUP*

3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD, HDFC BANK, SBI

பொங்கல் பண்டிகைக்கு வீட்டின் கூரையில் பூ வைப்பது ஏன்?

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதால்தான், பொங்கல் விழா கொண்டாட்டம், மூன்று நாட்களுக்கு தொடர்கிறது. அதற்கான தொடக்கம், காப்புக் கட்டும் நிகழ்ச்சி. மார்கழி கடைசியில் பழையதை போக்க போகியும், பின் புதியவை புகுவதற்கு தையும் உதவுகிறது. தைத்திருநாளை வரவேற்க, வீட்டின் கூரையில் பூ காப்புக் கட்டிய பிறகே, பொங்கல் கொண்டாட்டம் தொடங்குகிறது. காப்புக் கட்டுவதின் நோக்கம், இன்றைய தலைமுறைக்கு தெரிவது இல்லை. அதன் பயனை, இருபதுகளுக்கு விளக்க, அறுபதுகள் முன் வருவதில்லை. நகரங்களில் வசிப்போர், ஆயுத பூஜைக்கு பழம் வாங்குவதைப் போல், பொங்கலன்று கூரைப்பூ வாங்கி கடமையை முடிக்கின்றனர். எதற்காக அதை வைக்கிறோம், என்பது, அவர்களுக்கு தெரிவதில்லை. பயனறிந்து, கூரைப்பூ பயன்படுத்தி, பொங்கல் கொண்டாடுவது, கிராமங்களில் தான். அதன் பயன்பாடு, மகத்துவத்தை அவர்கள் தான், நன்கு உணர்ந்துள்ளனர். அப்படி என்ன அதில் இருக்கு, என்கிறீர்களா? கூரைப்பூவில் ஆறு விதமான தாவரம் இருக்கு; அதன் ஒவ்வொன்றுக்கும் பல்வேறு குணம் உண்டு. மா இலை காற்று மண்டலத்தில் ஆக்சிஜன் செறிவை அதிகப்படுத்தி காற்றை சுத்தப்படுத்தும், கூரைப்பூ (கண்ணுப் பிள்ளைப்பூ) பூச்சிகள் பிரவேசத்தை தடுக்கும்,சீரான சிறுநீர்போக்கு ஏற்படுத்தும், விஷ முறிவுக்கு உதவும். வேம்பு இலை நோய் எதிர்ப்பு தன்மை கொண்டது, கொசுக்களை தடுக்கும். ஆவாரை பூத்திருக்க, சாவாரை கண்டதுண்டோ என்ற முன்னோர் மொழிக்கேற்ப ஆவாரம் பூ, சர்க்கரை நோய், தோல் வியாதிகளை தடுக்கும். தும்பைச் செடி மார்கழி பனி முடிந்து, கோடை துவங்குவதால் ஏற்படும் காலநிலை பிணிகளை குணமாக்கும். பிரண்டை வயிற்றுப் புண் நீக்கும், செரிமானத்திற்கு உகந்தது. இத்தனை சிறப்புகள் இருந்தும், ரூ.5க்கு வாங்கும் சம்பிரதாய பொருளாக மாறிவருகிறது கூரைப்பூ. இந்த ஆறு வஸ்துகளையும், மஞ்சள் துணியில் கட்டி, வீட்டின் முன் தொங்கவிட்டால், மங்கலம், பாதுகாப்பு, ஆரோக்கியம், கிடைக்கும் என, நம் முன்னோர்கள் எழுதிச் சென்றுள்ளனர்.கிராமங்களில், அம்மை, அக்கி, மஞ்சள் காமாலை, நோய்களிலிருந்து பாதுகாக்க, கூரைப்பூக்களை

இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். ஆங்கில மருந்துகளுக்கு அடங்காமல், நம்மை ஆட்டி வைக்கும் நோய்கள் வந்த பிறகு தான், பாட்டி வைத்தியம், நாட்டு வைத்தியத்தை தேடிக் கொண்டிருக்கிறோம். ஆம், நாமே தொலைத்து, நாமே தேடிக் கொண்டிருக்கும் மருத்துவ புத்தகங்களில், கூரைப்பூவின் பக்கமும் ஒன்று. மலர்ச் செண்டு கொடுக்கும் நவீனத்தில் இருந்தாலும், நம் பாரம்பரியத்தை பாதுகாக்கும் கடமையை உணர்ந்து, கூரைப்பூ பயன்படுத்துங்கள்.

பொங்கலும்..திருவள்ளுவர் தினமும் சிறப்பம்சம் என்ன தெரியுமா?

பொங்கல்கொண்டாட்டங்களில் நான்காவது நாள் இடம்பெறும் காணும் பொங்கலை கன்னிப் பொங்கல் அல்லது கணுப் பண்டிகை என்றும் அழைப்பர். இந்நாளில் உடன்பிறந்த சகோதரர்கள் நலமுடன் வாழ சகோதரிகள் பிரார்த்திப்பது வழக்கம். கார்த்திகை எண்ணெயும் கணுப்பிடியும்உடன்பிறந்தானுக்கு' என்பது பழமொழி. அதாவது கார்த்திகை மாதம் எண்ணெய் தேய்த்துக் குளித்து விளக்கு வைப்பதும், பொங்கலில் பொங்கிய பால் சாதத்தை உடன் பிறந்தவர்களின் நலத்திற்காக அன்று காக்கா குருவிகளுக்கு அன்னமிடுவதும் இந்தப்பழமொழியின் விளக்கம். அன்றைய தினம் ஆற்றங்கரையிலோ அல்லது வீட்டு மொட்டை மாடியிலோ கோலமிட்டு, அதன்மீது இரண்டு மஞ்சள் அல்லது வாழை இலைகளை கிழக்கு முகமாய்வைக்கவேண்டும். முதல் நாள் பொங்கிய சாதத்தில் மஞ்சள் பொடி தூவி மஞ்சள் சாதம் கொஞ்சம், குங்குமம் கலந்த சிவப்பு சாதம் கொஞ்சம், வெள்ளையாய் பால் சாதம் கொஞ்சம், வெல்லம் சேர்த்த சக்கரைப் பொங்கல் கொஞ்சம் லேசாய் தயிர் சேர்த்த தயிர்சாதம் என ஐந்து வகை அன்னங்களை தயாரிக்க வேண்டும்.ஒவ்வொன்றிலும் 5 அல்லது 7 பிடி எடுத்து இலைமீது வரிசையாய் வைக் கும் போது, ‘காக்காப்பிடி வச்சேன் கணுப்பிடி வச்சேன். காக்கைக்கு எல்லாம் கல்யாணம். கண்டவர்க்கெல்லாம் சந்தோஷம். கூடப்பிறந்த சகோதர்கள் எந்நாளும் குறைவில்லாமல் சந்தோஷமாய் வாழணும்‘ என்று சொல்லிக்கொண்டே வைக்க வேண்டும். தீபம் ஏற்றிவிட்டு ஆரத்தி கரைத்து ஆற்றில் விடவேண்டும்.மேலும் உற்றார், உறவினர், நண்பர்களைக் கண்டு வாழ்த்துக்களையும் இனிப்புகளையும் பரிமாறிக் கொள்ளும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. சுற்றுலாத் தலங்களுக்கும், பொழுது போக்குமிடங்களுக்கும் இந்த நாளில் போவது வழக்கம்.திருவள்ளுவர்

தினம்அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்று தொடங்கி, ஈரடி குறளில் உலகத் தத்துவங்கள் அனைத்தையும் ‘திருக்குறள்' என்னும் உன்னதப் படைப்பில் மக்களுக்கு எடுத்துச் சொன்னவர், திருவள்ளுவர். உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளைப் படைத்து, உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைப்பெற செய்தவர்.1949ல், மாநிலப் பிரிவினைக் கான குரல்கள் எழுந்த நேரத்தில், தை மாதத்தின் தொடக்க நாளை திருவள்ளுவர் ஆண்டாக மறை மலை அடிகளார் அறிவித்தார். தைத் திங்களில் தொடங்கும் திருவள்ளுவராண்டு நாட் காட்டிகளைத் தமிழ் இயக்கங்கள் பரப்பினர். இதனைத் தொடர்ந்து 69 ல் முதல்வராக முதல்முறை பொறுப்பேற்ற கருணாநிதி தைப்பொங்கலுக்கு மறுநாளைத் ’திருவள்ளுவர் நாள்’ எனபிரகடனம் செய்து, அரசு விடுமுறை அறிவித்தார். அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும், தை மாதம் இரண்டாம் நாள் திருவள்ளுவர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த தினத்தில் திருவள்ளுவரையும், திருக்குறளையும் நினைவுகூர்வோம். தமிழர்தம் பெருமையை காப்போம்!!

தை அமாவாசைக்கு விரதமிருந்து வழிபாடு செய்வது எப்படி?

தை அமாவாசை அன்று பித்ருகளுக்கு தர்பணம் கொடுத்தால், ஸ்ரீ மகாவிஷ்ணு, சிவபெருமான் மற்றும் பித்ருக்களின் அருளாசிகளுடன் எண்ணற்ற நன்மைகள் கிடைக்கும். பித்ரு கடனை சரியாக நிறைவேற்றி னால் பல நன்மைகள் உண்டாகும். ராமபிரான் தசரத சக்கரவர்த்திக்கும், ஜடாயுவுக்கும் எள் தர்ப்பணம் செய்து பிதுர் பூஜை செய்தார். அப்போது, சிவபெருமான் ராமரின் முன் தோன்றி, “முன்னோருக்கு பிதுர் கடன் செய்து தர்பணம் செய்தால் அனைத்து பாவங்களும் நீங்கி, எல்லா நன்மைகளும் உன்னை தேடி வரும்” என்றார். இரவு பகல் பாராமல், பசியோடும் பாசத்தோடும் தன் வம்சத்தை காண வரும் பித்ருக்கள் அமாவாசைகளில் மிக விசேஷமானது தை அமாவாசையாகும். அன்று பித்ருக்கள் பூலோகம் செல்ல யமதர் மராஜா அனுமதி தருவார்.அப்போது பித்ருக்கள், தங்கள் பிள்ளைகளையும் உறவினர்களையும் பார்க்க மிகுந்த பாசத்துடனும், பசியோடும் வருவார்கள். நம் வம்சத்தினர் நமக்கு உணவு தருவார்களா என்று காத்திருப்பார்கள். அதனால், தை அமாவாசை அன்று பித்ருக்களுக்கு நிச்சயம் தர்பணம் தர வேண்டும். நாம் தரும் பிண்டமும், தண்ணீரும் தான் அவர்களுக்கு உணவு. பித்ருக்களின் சாபம்பட்ட குடும்பத்தில்தான் துர் சம்பவங்கள் நடக்கும். தெய்வம் கூட கருனை காட்டாது, உதவி செய்யாது என்கிறது கருட புராணம். கோடி புண்ணியம் தரும் எள் தானம் எள், ஸ்ரீவிஷ்ணு பகவானின் வியர்வையில் இருந்து உருவானது. எள் தானம் செய்தால் பல புண்ணியங்கள் கிட்டும். அதனால் தான், பித்ருக்களுக்கு பிண்டம் கொடுக்கும் போது எள்ளையும் கலந்தே தருகிறோம். தர்பைப் புல் ஆதியில் ஆகாயத்தில் உருவானது என்கிறது கருட புராணம். பல தேவர்களின் அருளாசியும், தெய்வங்களின் அருளாசியும் தர்பைக்கு இருக்கிறது. டி.வி. சானல் சிக்னல்களைப் பெற ஆண்டனா உதவுவதை போல, நாம் சொல்லும் மந்திரங்கள், மிக வேகமாக அந்தந்த தெய்வங்களை சென்றடைய தர்ப்பை உதவுகிறது. இப்படி சக்தி வாய்ந்த தர்ப்பையை கையில் வைத்துக்கொண்டு பித்ருக்களுக்கு பிண்டம் படைத்தால் அவை பித்ருகளை

எளிதாக சென்றடைந்து அதன் பலனாக பல தோஷங்கள் நீங்கும்.கோயிலில் தர்பணம் மற்றும் பித்ரு வழிபாடு முடித்த பிறகு வீட்டிற்கு திரும்பி வந்து, பித்ருக்களின் படங்கள் இருந்தால், அதில் துளசி மாலையோ அல்லது துளசி இலையோ சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், முன்னோர்களுக்கு பிடித்த உணவை படைத்து வணங்க வேண்டும். அந்த உணவை காக்கைக்கு வைத்த பிறகே நாம் சாப்பிட வேண்டும். முதியவர்களுக்கு அன்னதானம் செய்வது நல்லது. அப்படி செய்வதாலும் முன்னோர்களின் ஆத்மா சாந்தி யாகும்.

Newly Opened

SRI SASTHA MAHAL A/C

The Group of Sankar Constructions

Fully Airconditioned Thirumana Maaligai

In Hasthinapuram, RP Road

Bookings Open

- Main Hall capacity of 500 persons (Floating 1000 Persons)
- Dining hall capacity of 200 persons
- 14 A/C Rooms
- Modular Kitchen with store room and service lift for dining
- Passenger Lift capacity of 16 members
- CCTV Camera for whole building
- Vinayagar temple is within the premises
- The hall is fully equipped with stand by Generator
- Pooja items and Unjal available
- Ample car parking available for both four wheelers and two wheelers
- Valet Car Parking Available

No.32, Hariharan Towers, R.P.Road, Hasthinapuram, Chrompet - 44.

98416 59929 / 98416 59931 / 90030 10611

CLASSIFIEDS

RENTAL

RENT@ HASTHINAPURAM
Nr.Muthumariamman Temple, KL Mahal, R.P.Road, Bus Stop
1BHK, First floor, FAMILY / BACHELORS
89406 88478

FLAT FOR RENT @ CHROMPET
NEAR BALAJI HOSPITAL
3 BHK 1100 Sqft
1st floor, Car parking, Semifurnished, lift, inverter Provision, East Facing
87788 64431

NEW FLAT SALE

NEW FLATS FOR SALE @CHROMPET
PATEL STREET- NEHRU NAGAR
NEARER TO RAILWAY STATIONS & BUS STOP
3 BHK IN FIRST FLOOR & CAR PARKING
VISHNOO BUILDERS
9884042383
9444042383
9962542382

FLAT RESALE

FLAT FOR RESALE @CHITLAPAKKAM
SHANTI AVENUE
BUILD UP : 690 sqft UDS:390 Sqft
NORTH FACE, CCP
4 YEARS OLD
FIRST FLOOR-40L
70107 03870

FLAT FOR RESALES @CHROMPET
@ HASTINAPURAM
3BHK 1075 Sqft
5 YRS OLD, 1st FLOOR
LIFT, CCP
80722 30451

FLATS FOR SALE @ CHROMPET
1,2,3 BHK AVAILABLE
80722 30451

FLAT FOR RESALE @MARUTHI NAGAR
3 BHK - 1888 Sqft
UDS - 880 Sqft

IND HOUSE FOR SALE @ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
80722 30451

DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns.GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

FLAT FOR RESALE @CHROMPET
PADMANABHAN NAGAR
NR-KARUMARI AMMAN TEMPLE
2BHK-897 sqft, UDS-349 sqft
2 floor, Lift, CCP, Video Door,Two Year Old
Modular kitchen, Self fully cupboard
87788 64431 / 97890 52332

விளம்பரதாரர்களுக்கும், வாசகர்களுக்கும்
GST ROAD NEWS -ன்
Weekly News Paper

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

Our Edition
Chrompet - Tambaram
Selaiyur - Pallavaram

No. 4/7A, Padmanabhan Nagar, Karummari amman kovil 1st Street, Chrompet, Chennai - 600 044.

FLATS FOR SALE @ CHROMPET
NR.R.P. ROAD VIVEKANANDHA NSN SCHOOLS

HAND OVER JAN-26
AVAILABLE
2BHK
901-921 Sqft
AMENITIES
With Lift | As Per Vaasthu | CCP
CCTV | Videodoor Phone | Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER | Red Bricks Construction
INDIVIDUAL WATER TANK
LAND OWNERS INTERESTED IN JOINT VENTURE
ANUJ HOMES 81481 11101,94446 54776

குரோம்பேட்டை நியூ காலனியில் உள்ள அரசு உயர் நிலை பள்ளியின் முதல் தலைமை ஆசிரியரும், குரோம் பேட்டை திருக்குறள் பேரவையை 28 ஆண்டுகளாக நடத்தி வரும் டி.பி.இளங்கோவன் (91), உடல் நல குறைவால் குரோம்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரை தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் நேரில் சந்தித்து நலம் விசாரித்து, விரைவில் குணமடைய உயர் சிகிச்சைக்கு மருத்துவர்களிடம் பரிந்துரை செய்தார்.

ராதா நகர் சுரங்கப்பாதை திறக்கப்பட்டாலும் தொடரும் பிரச்சினைகள்...

ராதா நகர் சுரங்கப்பாதை 17 ஆண்டுக்கு பிறகு பயன்பாட்டுக்கு வந்தாலும் அதில் நீடிக்கும் பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்று குடியிருப்போர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. குரோம்பேட்டை ஜி.எஸ்.டி சாலையில் ரயில் நிலையத்திற்கு கிழக்கே 2.5 லட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் ராதா நகர் ரயில்வே கேட்டை கடந்து தான் செல்ல வேண்டும். இந்த ரயில்வே கேட்டு அடிக்கடி மூடப்படுவதால் போக்குவரத்து நெரிசல் மற்றும் காலதாமதம் உயிரிழப்பு ஆகியவை காரணமாக சுரங்கப்பாதை அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டது. குரோம்பேட்டை குடியிருப்போர் சங்க இணைப்பு மையம் உட்பட பல்வேறு அமைப்புகள் வைத்த கோரிக்கைகளால் 2009 ஆம் ஆண்டு ரூபாய் 14.75 கோடி செலவில் இலகுரக இருவழி வாகன சுரங்கப்பாதை அமைக்கவும் ரயில் நடைமேடைக்கு செல்வதற்கு மற்ற ரயில் நிலையங்களில் உள்ளது போல் படிக்கட்டு அமைக்கவும் திட்டம் தீட்டப்பட்டது. ஆனாலும் பல்வேறு காரணங்களால் இந்த திட்டம் தாமதமானது. இதனை தொடர்ந்து இந்த திட்டத்தை 18 மாதங்களுக்குள் முடிக்க உத்தரவிடக்கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உத்தரவு பெற்றார்கள். ரெயில்வே நிர்வாகம் இதனை நடைபாதை சுரங்க பாதையாக மாற்றவே முயற்சி செய்து வந்தது. ஆனாலும் குடியிருப்போர் சங்கங்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தியதால் இருவழி இலகுரக வாகன சுரங்க பாதை அமைக்கப்பட்டது. தற்போது இந்த சுரங்கப்பாதை மக்கள் பயன்பாட்டுக்கு வருகிறது. இருந்த போதிலும் இந்த சுரங்கப்பாதையை ஒரு வழி பாதையாக தான் பயன்படுத்த முடியும் என்று நிர்வாகம் கூறியுள்ளது. ஆனால் திட்டமிட்டபடி இருவழிப் பாதையாக பயன்படுத்த அனுமதிக்க வேண்டுமென்று போலீசாருக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் இணைப்புச் சங்கம் சார்பில் மனு கொடுக்கப்பட்டது. மேலும் கிழக்குப் பகுதியில் அணுகு சாலையும் எஸ்கலேட்டரும் பொருத்தப்படும் வரை எந்தவித சமரசமும் இல்லாமல் தொடர்ந்து அதற்கான முயற்சிகளை தொடர்வோம் என்று இணைப்பு மையத்தின் செயலாளர் முருகன் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

வெண்பொங்கல்

தேவையான பொருட்கள்:

1 டம்ளர் பொங்கல் பச்சரிசி,1/4 டம்ளர் பாசிப்பருப்பு, 4 டம்ளர் தண்ணீர், 1 டம்ளர் பால், 1டீ ஸ்பூன் நெய், தேவையான அளவு உப்பு, தாளிக்க: 1/2 டீஸ்பூன் மிளகு சீரகம்,1 வர மிளகாய்,1 கொத்து கருவேப்பிலை, 10 முந்திரி, 1 துண்டு இஞ்சி, 2 ஸ்பூன் நெய்,1 ஸ்பூன் ஆயில், 1/2 டீஸ்பூன் பெருங்காயத்தூள்.

செய்முறை: பாசிப்பருப்பு மற்றும் அரிசியை அரை மணி நேரம் ஊற வைத்து தண்ணீரை வடித்து குக்கரில் சேர்க்கவும் இதோட குறிப்பிட்டுள்ள அளவு தண்ணீர் மற்றும் பால் நெய் தேவையான அளவு உப்பு சேர்த்து குக்கரை மூடி சாதத்தை வேக வைத்துக் கொள்ளவும். தாளிப்பு சட்டியில் நெய் மற்றும் எண்ணெய் சேர்த்து சூடானதும் பொடியாக நறுக்கிய இஞ்சி சேர்த்து சிறு தீயில் பொன்னிறமாக வறுக்கவும். இதோடு கருவேப்பிலை காய்ந்த மிளகாய் இடித்த மிளகு மற்றும் சீரகத்தை சேர்த்து தாளிக்கவும் கடைசியில் உடைத்த முந்திரியை சேர்த்து பொன்னிறமாக வறுக்கவும்.தாளிப்பை குக்கரில் சேர்த்து ஒன்றாக கிளறவும் சுவையான சாம்பார் உடன் பரிமாறலாம்.

செம்பாக்கம் திருமலை நகர், நன்மங்கலம் ஏரி அருகில் ஜெயேந்திர நகர் பகுதியில் லேக் வியூ சிட்டியின் முதல் செயல் திட்டம் (INTERNATIONAL HUNGER WEEK PROJECT) உணவு வழங்குதல் திட்டம் மூலம் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட GAT K.M.J.அசோக், வட்டாரத் தலைவர் லயன் M.ஜெயபால் MJF, S.ராஜாத்தி ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை லேக் வியூ சிட்டி சங்க அரிமா சங்கத்தின் தலைவர் லயன் D.ராஜன் செயலாளர் J.சதீஷ் பொருளாளர் E.M.டேனியல், L.ஹரிகுமார், வெற்றிச்செல்வி, தினேஷ்,செந்தில்குமார், மற்றும் சங்கத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் பகுதி குடியிருப்போர் நல சங்கத்தினர் உள்ளிட்டோர் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

குரோம்பேட்டை ஜி.எஸ்.டி ரோட்டின் மேற்கு பக்கத்திலிருந்து குரோம்பேட்டை ரயில் நிலையத்தை இணைக்கும் பாலத்தில் உள்ள தானியங்கி படிக்கட்டினை நீண்ட காலமாக சீர் செய்யாமல் பொதுமக்களையும், குறிப்பாக முதியோர்களையும், மாற்றுத்திறனாளிகளையும், இன்னலுக்கு உள்ளாக்கும் தி.மு.க அரசினை கண்டிக்கும் வகையிலும் நிர்வாக சீர்கேட்டினை வெளிச்சம் போட்டு காட்டும் வகையிலும் அதிமுக குரோம்பேட்டை பகுதி செயலாளர் / முன்னாள் அரசு வழக்கறிஞர் குரோம்பேட் **M.K.**சதீஷ் அதிமுக நிர்வாகிகளுடன் கண்டன கோஷங்கள் எழுப்பி, செயல்படாத தானியங்கி படிக்கட்டுக்கு மலர் மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினார்.

போரூர் வடபழனி நாளை மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்

பூந்தமல்லிபோரூர் இடையேமெட்ரோ ரயில் வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டன. இதற்கான தற்காலிக பாதுகாப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது 20ஆம் தேதி இறுதி சோதனை ஓட்டம் நடந்த பிறகு நிரந்தர சான்றிதழ் வழங்கப்பட்டு போக்குவரத்து தொடங்கும் அதே சமயம் போரூரில் இருந்து நேரடியாக வடபழனிக்கு இன்று சோதனை ஓட்டம் நடைபெறுகிறது இதுவும் முடிந்துவிட்டால் பூந்தமல்லியில் இருந்து வடபழனிக்கு மெட்ரோ ரயில் இந்த மாதிரி இறுதியில் ஓட தொடங்கும்

தங்கத்தின் விலை தொடர் உயர்வு

தங்கம் விலை உயர்ந்துள்ளது. தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ஒருகிராம் ரூ.12,900க்கும் பவுனுக்கு ரூ.800 உயர்ந்து ஒரு பவுன் 1,03,200க்கும் விற்பனையாகிறது.வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. அந்த வகையில், கிராமுக்கு ரூ.7 உயர்ந்து ஒரு கிராம் ரூ.275, கிலோவுக்கு அதிரடியாக ரூ.7,000 உயர்ந்து ஒரு கிலோ ரூ.2,75,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

விஜய் பிரச்சார வாகனம் பறிமுதல்: சிபிஐ நடவடிக்கை

தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் பங்கேற்ற கரூர் கூட்ட நெரிசல் குறித்து சிபிஐ விசாரித்து வருகிறது இது தொடர்பாக விசாரணைக்கு வரும்படி விஜய்க்கு அழைப்பு கொடுத்துள்ளனர். கரூர் கூட்டத்திற்கு விஜய் பயன்படுத்திய விசேஷ பேருந்து பறிமுதல் செய்தனர் அதை கரூருக்கு கொண்டு வந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இனிமேல் வழக்கு முடிந்த பிறகு தான் அதை அவர் மீட்க முடியும்.

குரோம்பேட்டை சாஸ்தா மஹாலில் மெட்ராஸ் அஸ்தினாபுரம் அரிமாசங்கம் சார்பாக ஏழை எளிய மக்களுக்கு லயன்ஸ் கிளப் சார்பாக அன்னதானம் வழங்கிய போது எடுத்தபடம். அன்னதானத்தில் செயலாளர் **K.H.** சங்கரநாராயணன், அவரது துணைவியார் நித்யாசங்கர நாராயணன் மற்றும் லயன்ஸ் கிளப் நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பாக நடத்தினர்.

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 30 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

VISHNUSRI HOMES
☑ Ind. House Plan
☑ Flat Renovation
☑ Expansion
☑ Modular Kitchen
☑ Sump & Compound Wall
88257 88408 / 73972 32365

WANTED
SUPERVISIOR{Male}
@CHROMPET
QUALIFICATION: +2/ DEGREE
DIPLOMA WITH BASIC COMPUTER KNOWLEDGE
SALARY RS.16000/ {P.M}
98416 54214
91718 09600

KR HOMES
ENGINEER & CONTRACTOR
★ CONSTRUCTION
★ ARCHITECTURAL PLANS
★ APPROVALS
★ RENOVATION
★ LABOUR CONTRACT
80724 99969

WANTED
SALES EXECUTIVES
LIGHT VEHICLE DRIVERS
RECEPTIONIST-FEMALE, TELECALLER-FEMALE
ACCOUNTANT WITH KNOWLEDGE OF TALLY/GST
RTO DOCUMENTS/EXCEL/MSW-FEMALE
EMPIRE-EULER SHOW ROOM FOR ELECTRICAL VEHICLE 3 AND 4 WHEELERS
KRISHNANAGAR , NEAR PAMMAL
94456 05450 / 73050 79369 / 97911 67450

NAVABHARATH
NURSERY & PRIMARY SCHOOL
(Managed by : SASI REKHA MEMORIAL EDUCATIONAL TRUST)
ISO 9001:2015 Institution
5, Isayagam Street, Radha Nagar, Chrompet, Chennai - 600 044.

"As part of the Pongal celebrations, a Rangoli Competition was held at Navabharath School, Chrompet. Parents enthusiastically participated, showcasing their creativity and cultural spirit. This event was graced by Dr. V.Himabindu MBBS, MS (OBGYN) and Honourable Principal Mrs.Jansirani Palaniswamy, who appreciated the participants creativity and festive spirit".
ADMISSIONS OPEN FOR PRE-KG to V STD
84382 31101 / 98411 28656

SCS KINDERGARTEN SCHOOL

#15 Ranganathan Street, Nehru Nagar
Chromepet, Chennai-44
Ph: 7868001786, 9282438170

ADMISSIONS GOING ON FROM Pre KG - XII STD

S.C.S.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 10.01.2026 நேற்று மாணவ, மாணவிகளின் திறமை கண்காட்சி சிறப்பாக நடைபெற்றது .அனைத்து மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.

www.balaajeebhavan.com
/balaajeebhavan

பொன்னான புதுப்பானையில்
பொங்கிவரும் பொங்கல்போல
வெள்ளை மனம் கொண்ட
தமிழர்களின் வாழ்வில்
மகிழ்ச்சி பொங்கட்டும்
வெற்றிகள் குவியட்டும்.

பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

Happy Pongal

Shri Balaajee Bhavan
Delicious veg cuisine

Rooftop Buffet
7.00 pm to 10.30 pm
Weekends and Special Occasions Buffet Only
For Details Contact : 9363612526

Chrompet| Pondy Bazar | Anna Nagar | Kattupakkam
Ambattur | Potheri | Melmaruvathur

NSN MEMORIAL SCHOOL
KUNDRATHUR- CHENNAI 69

NSN MEMORIAL SCHOOL
KNOWLEDGE IS POWER

Scan QR code to get Location

Cordially invites you to the
INTER - SCHOOL COMPETITIONS
LITTLE CHAMP & FUSION FORUM

Scan the QR code to Register!

DATE & TIME
SATURDAY | JANUARY 24 2026 | 9.00 AM

Venue
PKV Maha Nagar Main Road, Dharmalingam Nagar, Kundrathur, Chennai 600069

MRS.AJITHA 9840476098
MRS.FATIMA 9962400360
MRS UMA.s 9486628774

Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725